# கு.அழகிரிசாமி சிறுகதைகளில் பெண்ணியமும் சமூகமும்

**ப.முருக உமாமகேஸ்வரி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
ஆய்வு நெறியாளர் : **முனைவர் பெ.இளையாப்பிள்ளை**

**ஆய்வுச் சுருக்கம்**

கு. அழகிரிசாமி 1942 -இல் தன் முதல் படைப்பான உறக்கம் கொள்ளுமா எனும் கதையை ஆனந்த போதனையில் வெளியிட்டார். இதழ்ப் பணியில் சேர்ந்த பின்னர் அழகிரிசாமி என்னும் பெயரில் மட்டுமல்லாது வெவ்வேறு பெயர்களில் படைப்புகளை வெளியிட்டார். கல்கி முதலிய இதழ்களில் தொடர் கதைகளும் எழுதினார். கு. அழகிரிசாமி அவர்கள் நாவல்கள், சிறுவர் இலக்கியங்கள், மொழிபெயர்ப்புகள், நாடகங்கள், கட்டுரைத் தொகுப்புகள், கடித இலக்கியங்கள் எனப் பல்வேறு தளங்களில் பயணித்து இருப்பினும், இன்றளவும் சிறுகதை ஆசிரியராகவே நினைவு கூறப்படுகிறார். புதுமைப்பித்தன்குப்பின் எதார்த்த வாதச் சிறுகதையில் முதன்மை சாதனையாளர் கு.அழகிரிசாமிதான் என்னும் விமர்சன மதிப்பீடு அறிஞர்கள் மத்தியில் உண்டு.

கு.அழகிரிசாமியின் கதைகள் நேரடியானவை. எளிய மொழியில் பெரும்பாலும் உரையாடல்கள் வழியாக முன் நகர்பவை. கு.அழகிரிசாமி உத்தி சோதனைகள் செய்யவில்லை. கதைகளை ஊடகமாக்க முயலவும் இல்லை. பெரும்பாலான கதைகள் வாழ்க்கையை வெளிப்படையாகச் சொல்வனவாகச் சிறுகதை வடிவம் அமைவதாக உள்ளன. அவருடைய சிறந்த கதைகளில் தன்னியல்பாகவே மானுட நேயம் என்று சொல்லப்படும் உளநிலையில் உச்சம் வெளிப்படுகிறது. உறவு சிக்கல்களின் ஆழம் தொட்டுக் காட்டப்படுகிறது. அக்கதைகள் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளாக கருதப்படுகின்றன. அத்தகுப் படைப்புத்திறன் பெற்றதாலேயே அவர் தனது அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்காக 1970 – ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றார். எனவே இச்சிறுகதைத் தொகுப்பினை கூர்ந்தாய்வு செய்யும் நோக்கில் இவரது அன்பளிப்புச் சிறுகதைத் தொகுப்பில் காணலாகும் பெண்ணியம் மற்றும் சமூகச் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** கு.அழகிரிசாமி, சிறுகதைகள், பெண்ணியம், சமூகம், சாகித்ய அகாடமி விருது, அன்பளிப்பு.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**முன்னுரை**

ஒரு மொழியின் வளமைக்குக் காரணமாகத் திகழ்வது இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியம் மக்களின் வாழிடச் சூழலுக்கு ஏற்ற வகையில் கட்டமைப்பு முறையிலும் கருப்பொருள் உள்ளடக்கத்திலும் பல்வேறு பரிணாமங்களைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளன. இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சியினை ஆராயும்போது குறிப்பிடத்தக்க இடத்தினை நவீன இலக்கியமான புனைகதை இலக்கியங்கள் பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது. இவ்வகையான புனைகதை இலக்கியங்களாகக் கருதப்படுவது புதினங்கள் மட்டுமல்லாது சிறுகதைகளும் ஆகும். புனைகதை இலக்கியங்கள் யாவும் தற்காலத்தில் நிலவும் சமூக நடைமுறைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவுற எடுத்தாளும் இலக்கிய வகைமையாக விளங்குகின்றன.

இலக்கியங்கள் என்பது வாழ்க்கை முறைமைகளின் வெளிப்பாடேயாகும். வாழ்க்கையானது தொடர்ச்சியான இயக்கங்களையும் மாற்றங்களையும் உள்வாங்கித் திகழ்கின்றன. மேலும் மக்களின் வாழ்க்கை முறையும், அவர்தம் உணர்ச்சி வெளிப்பாடும் மாற்றங்களை அடைந்து கொண்டே உள்ளன. இவ்வாறான மாற்றங்களே புதிய புதிய இலக்கியங்களுக்கான தோற்றுவாயாக அமைந்து, புனைகதை இலக்கியங்கள் என்னும் வகைமையும் தோன்றலாயின. பண்டைய காலந்தொட்டே தமிழ் மரபில் புனைவு வடிவிலான கதைகளைக் கூறுதல் என்னும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. ஆயினும் இன்றளவில் உருவாகும் புனைகதை இலக்கியங்கள் அனைத்தும் எழுத்து வடிவில் அமைவதோடு மட்டுமின்றி வாழ்க்கை முறைகளில் காணலாகும் சிக்கல்களையும் அவலங்களையும் நடைமுறை எதார்த்தங்களையும் கருப்பொருள்களாகக் கொண்டு உள்ளன. மேலும் இவற்றுள் நுணுக்கங்களையும் ஆளுமைகளையும் உள்ளடக்கிக் கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றின் உதவியுடன் புனைகதையின் நிகழ்வுகளை உண்மை நிகழ்வுகளைப் போன்று புனையும் ஆற்றலைக் காணமுடிகின்றது.

இலக்கியங்களானது சமூகத்தின் எல்லா நிலைகளையும் மேலான நிலைக்குக் கொண்டு செல்லும் வன்மையை உள்ளடக்கமாகக் கொண்டு அமைந்துள்ளன. அதுமட்டுமின்றி சமுதாயத்தில் காணலாகும் பலவிதமான பிரச்சனைகளை வெளிப்படுத்தி, அதற்குரிய தீர்வுக் காரணிகளை மானுடச் சமூகம் கைகொள்ளச் செய்யும் இயல்புடையது. இவற்றின் வழி வாழ்க்கை முறைமைகளை, மேன்மையுறச் செய்யும் வலிமைமிக்க பேராயுதமாகப் புனைகதை வடிவிலான இலக்கியங்கள் விளங்குகின்றன.

மனித சமூகம் உயர்நிலையை எட்டுவதற்குத் தடைக்கற்களாக உள்ள அனைத்திற்கும் போராட்டச் சிந்தனைகளை விதைத்து, மானுட உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற தன்மையுடன் புனைகதை இலக்கியங்கள் வீறுநடை போடுகின்றன. மானுடச் சமூகம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளன. அத்தகு மாற்றங்களில் பலவிதமான கூறுகள் நிலவினாலும் அச்சமுதாயத்தைக் கூர்ந்தாய்வு செய்யும் இலக்கியக் கூறுகளுள் மிகவும் இன்றியமையாத இடத்தைச் சிறுகதை இலக்கியங்கள் பெற்று விளங்குகின்றன.

சிறுகதை இலக்கியங்கள் யாவும் தான் வெளிக்கொணரும் சமூகத்தையும் காலச் சுழற்சியினால் எழும் பரிணாமங்களையும் இடைவிடாது ஆவணமாக்கி வருகிறது என்றால் அது மிகையாகாது. அவ்வாறு வெளிவந்த, இந்திய அரசின் சாகித்ய அகாடமி விருது பெற்ற கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் காணலாகும் சமூகம் மற்றும் பெண்ணியம் சார்ந்த கருத்தாக்கங்களை ஆய்ந்தறிவதாக இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.

**ராஜா வந்திருக்கிறார் - சிறுகதையில் பெண்ணியம்**

பெண் என்னும் பிறப்பு முழுமை பெறுவது தாய்மையில் தான். தாய்மை என்னும் உணர்வின் உச்சகட்ட பண்பு நலன் அரவணைப்பு, தியாகம், சகிப்புத்தன்மை ஆகும். இத்தகைய உயர் பண்பு நலன்களைப் பிரதிபலிப்பதாக அமைத்த கதைதான் 'ராஜா வந்திருக்கிறார் என்னும் சிறுகதை. இச்சிறுகதையின் கதைத் தலைவி தாயம்மாள். இவளுக்குச் செல்லையா, தம்பையா, மங்கம்மாள் என்று மூன்று பிள்ளைகள். விடிந்தால் தீபாவளி. அத்தகைய இரவு நேரத்தில் தாயம்மாளின் வீட்டிற்கு வந்து நிற்கிறான் ஆதாவற்ற ராஜா என்கிற சிறுவன். அவனது நிலையைக் கண்ட தாயம்மா அச்சிறுவனை பார்த்து நீ யார்? எந்த ஊர் என வினவி, தன் பிள்ளைகளைப் போலவே ஆதரித்து உணவளித்து உறங்கச் செய்கிறாள். மறுநாள் காலை,தாயம்மாளின் பிள்ளைகள் புத்தாடை உடுத்தி நிற்க, ராஜா மட்டும் புத்தாடை ஏதுமற்ற நின்றதைப் பார்த்து, தன் குடும்பத்தின் வறுமை சூழ்நிலையும் மறந்து தாய்மை குணம் மேலிடும் படியாக அந்தச் சிறுவன் ராஜாவிற்கு, தன் கணவனுக்காக இருந்த, வறுமையிலும் வேறு வழியின்றி வாங்கிய புதுத் துண்டைக் கொடுப்பதாக இக்கதை பயணம் செய்கிறது. இதன் மூலம் முன்பின் அறியாத சிறுவனைத் தன் பிள்ளையைப் போல அரவணைத்துத் தாய்மை என்னும் பண்புநலனுக்கு ஓர் உதரணமாகத் தாயம்மாள் திகழ்வதாக கு.அழகிரிசாமி தனது பெண்ணியம் சார்ந்த கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

## அழகம்மாள் - சிறுகதையில் பெண்ணியம்

பெண்களுக்கான சமூகக் கட்டுப்பாடுகளை உருவாக்கியவர்கள் ஆண்கள். அதைக் காலங்காலமாகப் பின்பற்ற வைத்து மரபு என்னும் கோட்பாட்டுக்குள் கொண்டு வருகின்றனர். ஆனால் அவற்றிலிருந்து மீளாமல் அவற்றைக் காப்பாற்றிக் கொண்டு இருப்பவர்கள் பெண்களே. அவ்வாறு அவர்களை மீளச் செய்யாமல் இருப்பவை ஆணாதிக்கவாதிகளின் அறிவுப்பூர்வமான செயல்களே. பெண்கள் தங்கள் சூழலில் இருந்து விடுபட நினைத்துச் செயல்பட்டால் முன்னேறிச் சென்ற அளவில் இருந்து பத்து மடங்கு கீழே விழ வைக்கின்றனர். அதற்கு மரபென்னும் சதியே காரணமாகும்.

கு.அழகிரிசாமி எழுதிய 'அழகம்மாள்' என்னும் கதையில் அழகம்மாள் தன்னுடைய அத்தையின் மகனை மணந்து கொள்கின்ற சந்தர்ப்பம் வருகின்றது. அப்போது தன்னுடைய வாழ்க்கையை அவனுக்காகத் தியாகம் செய்கின்றாள். அவளுக்குத் திருமணமாகி ஒரு வருடத்தில் ஆண் குழந்தை பிறக்கின்றது. அவனை மதுரையில் பி.ஏ. படிக்க வைக்கின்றனர். அப்போது அவனுடைய நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வருகிறான். அழகம்மாளிடம் முன்பு இருப்பதைக் காட்டிலும் இப்போது ஆடையில் மாற்றம் ஏற்படுகிறது. அழுக்குப்படாமல் அதனை உடுத்திக்கொள்வது என்று இருக்கிறாள். இது மகனுக்கு விசித்திரமாக இருந்தாலும், இப்பொழுது இருக்கின்ற நாகரிகத்திற்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டாள் என்று நினைத்துக் கொள்கிறான். ஒருநாள் ஒரு சேலைக்காக இரவு முழுவதும் அழுகிறாள். மகன் எழுந்துபோய் எதற்காக அழுகிறாய் என்கிறான். என்னுடைய அப்பாவை நினைத்து அழுகிறேன் என்கிறாள். அவனுக்குப் புரிந்துவிடுகிறது.

அம்மாவுக்குப் பைத்தியமா என்ன? சேலைக்குத்தானா இப்படி ஒப்பாரி வைத்து அழுகிறாள்? உண்மையில் சேலைக்குத்தானா இது? கோபால் தத்தளித்தான். அம்மாவுக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது என்று நினைத்து வாசல் திண்ணைக்கு ஓடிக் கோனாரை எழுப்பப் போனான். அவனுக்குத் தெரியும் அம்மா சேலைக்காகத்தான் அழுகிறாள் என்று. அழுகின்ற சத்தத்தைக் கேட்டு ஊரே திரண்டு வந்துவிட்டது. அழகம்மாளுக்கு அவர்களைக் கண்டதும் தன்னுடைய பிரமிப்பில் இருந்து சற்று விலகித் தன்நினைவிற்கு வந்துவிடுவதாகக் கதை அமைந்துள்ளது.

தியாகத்தின் மறுவுருவம் தாய்தான். அத்தகைய தாய் புதுமையை ஏற்கின்றபோது அதனைப் புரிந்துகொள்ளும் அளவில்தான் பையனும் இருக்கிறான். மகனின் படிப்பின் மூலம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளவும் நாகரிகமாக உடை அணியவும் பழகிக் கொள்கின்றாள். ஒரு சேலையின்மீது விருப்பம் அடைகிறாள். பொருளாதார ரீதியில்

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

வாங்க இயலவில்லை. அந்த ஏமாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் அழுகின்றான். சத்தத்தைக் கேட்டு ஊரில் உள்ள மக்கள் அனைவரும் வந்து நிற்கையில் தன்னிலையினை அடைகின்றாள்.

இதிலிருந்து பெண் பழமையிலிருந்து புதுமைக்குத் தன்னை மாற்றிக்கொள்ளவும் வளர்ச்சியடையவும் நினைத்துச் செயல்பட்டால்கூட அவர்களின் அடி மனத்தில் விதைத்த சமூக மரபு அவளைக் கீழே தள்ளி நசுக்கி விடுகின்றது. தன்னுடைய கையை வைத்துத் தன் கண்ணைக் குத்துவது போல மிகவும் எச்சரிக்கையாக மரபு என்ற அடிப்படையில் தன்னை மாற்றிக்கொள்ளப் பெண்களைப் பழக்கப்படுத்தியிருப்பதை இக்கதை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

### கு. அழகிரிசாமி சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

எந்த ஒரு படைப்பும் காரணம் இல்லாமல் நிகழ்வதில்லை. தனி மனிதக் காரணங்களைப் போலவே சமூகக் காரணங்களும் இதற்கு உண்டு. காரணங்களே படைப்புகளைத் தீர்மானிக்கின்றன. படைப்புகளின் வகைகளை, வடிவங்களைத் தீர்மானிப்பது இதே காரணங்கள் தான். வாழ்க்கையின் மீது கு.அழகிரிசாமி கொண்டிருந்த ஈடுபாடும், நேசிப்பும், கணிப்பும், மதிப்பீடுமே அவர் கதைகளுக்குக் காரணங்களாயின. இக்கதைகளின் மூலம் அவர் வாழ்ந்த காலச் சமுதாயத்தின் மனித வாழ்வியலைத் தம் கதைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

குழந்தை பற்றிய கருத்துகள் கு. அழகிரிசாமியின் சிறுகதைகளில் முக்கிய இடம் பெறுகின்றன. அதுகள் (குழந்தைகள்) ஒவ்வொன்றும் ஒரு பொக்கிஷம் என்று ஒரு சிறுகதையிலும், குழந்தையின் அழகிலும், அதன் விளையாட்டுகளிலும், பேதைமையிலும் ஈடுபட்டு மெய் மறக்காத கலைஞர்கள் கிடையாது என்று ஒரு கட்டுரையிலும் கு.அழகிரிசாமி குறிப்பிடுகிறார்.

குழந்தைகளைக் கதைமாந்தராகக் காட்சிப்படுத்துவதின் வழி அவர்களின் தூய்மையான அன்பைப் பல சிறுகதைகளில் காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர் கு.அழகிரிசாமி. குழந்தைகளின் அன்பு தூய்மையானது. வேறுபாடு அற்றது. கள்ளம் கபடம் இல்லாதது. வேற்றுமை அறியாதது என்பதான பல்வேறு கோணங்களில் இவர் குழந்தைகளின் அன்பைக் காட்சிப்படுத்தி உள்ளார்.

### அன்பளிப்பு – சிறுகதையில் சமூகம்

'அன்பளிப்பு' என்ற சிறுகதையில் தெருவில் குடியிருக்கும் ஒருவர் சாரங்கனைத் தவிர்த்து மற்ற குழந்தைகளுக்கு 'டைரி' களை அன்பளிப்பாக வழங்கித் தனக்கு அவர் வழங்காதது அவனை மேலும் வருத்தத்திற்கு உள்ளாக்குகிறது. இதனால் காய்ச்சல்

வந்துவிடுகிறது. அச்சிறுவனைப் பார்க்கத் தயங்கிய அவரைத் தன் வீட்டுக்கு வற்புறுத்தி அழைத்துச் செல்லும் சாரங்கன், அவர் மற்ற இரு குழந்தைகளுக்கு வழங்கிய டைரி போன்றே நிறமும், வடிவும், விலையும் உள்ள ஒரு டைரியை அவர் கையில் கொடுத்து அதில் என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு என்று எழுதுமாறு வேண்டுகிறான்.

சாரங்கா! வா! உன் வீட்டுக்கே போகலாம். இருவரும் கைகோர்த்துக்கொண்டே சென்றோம். அவன் வீட்டுக்கு முன்னால் போனதும், என் கையை விட்டுவிட்டு வீட்டுக்குள்ளே வேகமாக ஓடினான். அப்புறம் வெளியில் வந்து வாசல் பக்கத்திலுள்ள அறையைத் திறந்து, 'வாருங்கள், வாருங்கள்' என்று படபடப்பாக இரைந்து சொன்னான். என்னுடைய தயக்கத்தையும் என்னுடைய சங்கோஜத்தையும் அளவிட்டுச் சொல்ல முடியாது. வேறு வழியில்லாமல் அந்த அறைக்குள் சென்றேன். அறையின் சூழ்நிலையைக் கொண்டே சாரங்கனின் பெற்றோர்கள் ஏழைகள் என்று எளிதில் தீர்மானிக்க முடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பக்கத்தில் கிடந்த அவனுடைய சரித்திரப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். சாரங்கன் வீட்டுக்குள்ளே ஓடிவிட்டான். அப்போது வெளியிலிருந்து வந்த அவனுடைய தகப்பனார் அறைக்குள் எட்டிப் பார்த்தார். என்னைப் பார்த்து 'வாருங்கள்' என்று சொல்லிவிட்டு, உள்ளே போய்விட்டார். 'என்ன விசேஷம்?' என்று என்னை அவர் விசாரிக்காமல் விட்டது எனக்கு ராஜமரியாதை செய்ததுபோல இருந்தது.

சாரங்கன் திரும்பி வரும்போது, ஒரு தட்டில் உப்புமாவும் ஒரு டம்ளரில் காபியுமாக வந்து சேர்ந்தான். நான் திடுக்கிட்டுவிட்டேன். என் சுவாசம் அப்படியே நின்றுவிட்டது. ஐயோ இதெல்லாம் எதற்கு? நான் இப்போதுதானே சாப்பிட்டேன்! சந்தோஷப் படபடப்பில் ஒன்றுமே சொல்லாமல் வந்து அவன் என் வலது கையைப் பிடித்து இழுத்து உப்புமாத் தட்டில் கொண்டுபோய் வைத்தான். சாரங்கன் ரொம்பவும் சிறு பிள்ளையாக இருக்கிறான். இனிமேல் இவனிடம் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் நடந்துகொள்ள வேண்டும். இன்று மட்டும் ஏதோ கசப்பு மருந்தைச் சாப்பிடுவோம் . வேறு வழியில்லை என்று எண்ணிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தேன். சிறு பையன் பேச்சைக் கேட்டு விருந்தாட வந்த என்னைப் பற்றி அவனுடைய பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு அதிர்ச்சி கொடுத்த வண்ணமாக இருந்தது.

ஒரு வழியாகச் சாப்பிட்டு முடிந்தது. தட்டையும் டம்ளரையும் உள்ளே கொண்டுபோய் வைக்கப் போனான் சாரங்கன். சாரங்கன் வெளியே வந்தான். மேஜையைத் திறந்து ஒரு பவுண்டன் பேனாவை எடுத்தான். என் முகத்துக்கு எதிரில் நிற்காமல் என் முதுகுப் புறமாக வந்து நின்று கொண்டான். அங்கே நின்ற வாக்கிலேயே,

நான் கையில் வைத்திருந்த சரித்திரப் புத்தகத்தை மெதுவாகப் பிடித்து இழுத்துத் தூரத்தில் வைத்தான். தூங்கும் குழந்தையின் கையிலிருக்கும் கிலுகிலுப்பையை எவ்வளவு ஜாக்கிரதையாகத் தனியே எடுத்து அப்புறப்படுத்துகிறோமோ, அதுபோல அதை அப்புறப்படுத்தினான். பிறகு அவன் வலது கையால் தன் கால் சட்டையின் பையில் கையை விட்டு எதையோ எடுப்பதுபோல் எனக்கு ஜாடையாகத் தெரிந்தது. அதை என் முன்பாக மேஜைமேல் வைத்தான்.

அது ஒரு டைரி. நான் சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்த டைரிகளைப் போன்ற ஒரு டைரி. அதே கம்பெனியில் செய்தது. அதே நிறமுடையது. அப்புறம் பேனாவை என் கையில் கொடுத்து 'எழுதுங்கள்' என்றான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'என்ன எழுத?' என்று கேட்டேன். 'என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு' என்று எழுதுங்கள், என்று தனக்கு டைரி தர மறந்த போதும் அச்சிறுவன் சாரங்கன் அவர் மீது கொண்டிருந்த கள்ளம், கபடமற்ற தூய்மையான அன்பை எடுத்துரைப்பதாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

**ராஜா வந்திருக்கிறார் - சிறுகதையில் சமூகம்**

கு. அழகிரிசாமியின் கதைகளில் ஒன்றான 'ராஜா வந்திருக்கிறார் என்ற கதையில் குழந்தைகளுக்கிடையில் படப் போட்டி நடக்கிறது. மிராசுதார் மகன் ராமசாமியும், மழைக் குழந்தைகளான செல்லையா, தம்பையா, மங்கம்மாள் ஆகியோரும் புத்தகங்களில் படத்தைக் காட்டிப் போட்டி நடத்துகிறார்கள். அதைத் தொடர்ந்து உங்க வீட்டில் அது இருக்கிறதா? இது இருக்கிறதா? என்று போட்டியும் வளர்கிறது. அன்று இரவு 'ராஜா' என்ற அனாதைச் சிறுவன் ஏழைக் குழந்தைகளான செல்லையா, மங்கம்மான் ஆகியோரின் வீட்டிற்கு வருகிறான். சிறுநீர் கழிக்க வெளியில் வந்த சிறுவன் இருட்டில் கிழிந்த கால்சட்டையுடன் நின்று கொண்டிருந்த அனாதைச் சிறுவனைப் பார்த்து பயந்து ஓடி வருகிறான். அதைப் பார்த்த அவன் தாய் 'தாயம்மா' அச்சிறுவனை அழைத்து வந்து தன் பிள்ளைகளுடன் படுக்க வைக்கிறாள். மறுநாள் தீபாவளி. அவர்களின் தாய் தாயம்மா அச்சிறுவன் ராஜாவையும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, புதிய ஆடை அணியச் செய்கிறாள். பெயர் தெரியாத அச்சிறுவனை 'ராஜா' என்றே அழைக்கின்றனர். மிராசுதார் மகன் ராமசாமியின் அக்காள் புருசன் தலைத் தீபாவளிக்கு வந்திருக்கிறான். அவன் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால் எல்லோரும் அவனை 'ராஜா' என்றழைக்கிறார்கள். ராமசாமி அக்காள் புருசன் வந்திருப்பதை 'எங்கள் வீட்டுக்கு ராஜா' வந்திருக்கிறார் என்கிறான். ஐயோ! உங்க வீட்டுக்குத்தானா ராஜா வந்திருக்கிறார் எங்க வீட்டுக்கும்தான் ராஜா வந்திருக்கிறான் என்று குழந்தைகள் கூறுகின்றனர். இதனை,

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

தெருவில் ஜன நடமாட்டம் தொடங்கிவிட்டது. மழையும் பரிபூரணமாக நின்றுவிட்டது. உதயத்தின் ஒளி சல்லாத் துணியைப் போல அவ்வளவு மெல்லியதாக ஊரையும் உலகத்தையும் போர்த்தியது. புதுத் துணிகளுக்கு மஞ்சள் வைத்துச் செல்லையாவும் உடுத்துக் கொண்டான்; தம்பையாவும் உடுத்துக்கொண்டான்; மங்கம்மாளும் பாவாடையையும் சட்டையையும் போட்டுக்கொண்டாள்.

ராஜா... அவன் கௌபீனத்தோடுதான் நின்றான். எங்க வீட்டுக்கு ராஜா வந்திருக்கிறார்!" ஊர்க்காரர்களைப் போல அவனும் தன் அக்காள் புருஷனை ராஜா என்று சொன்னான். ஆனால் அவன் சொன்னதற்குக் காரணம் சந்தோஷம்தானே ஒழிய, மங்கம்மாளைப் போட்டிக்கு அழைப்பதற்காக அல்ல. ஆனால், அவளோ வேறுவிதமாக நினைத்துவிட்டாள். முதல் நாள் பள்ளிக் கூடத்திலிருந்து வந்தபோது நடந்த போட்டிதான் அவள் ஞாபகத்தில் இருந்தது. அவன் சொன்னதற்குப் பதில் சொல்லி அவனுடைய பெருமையை மட்டம் தட்ட வேண்டும் என்று அவள் மனம் துடித்தது. அதனால், ஒரு அரை அடி முன்னால் நகர்ந்து வந்து நின்றாள். யாதொரு திகைப்பும், தயக்கமும் இல்லாமல் ராமசாமியைப் பார்த்து ரேகை சாஸ்திரியிடம் காட்டுவதுபோலக் கையை வைத்துக் கொண்டு, மிக மிக ஏளனமாகச் சொன்னாள். ஐயோ! உங்க வீட்டுக்குத்தானா ராஜா வந்திருக்கிறார் எங்க வீட்டுக்கும்தான் ராஜா வந்திருக்கிறான். வேணும்'னா வந்து பாரு என்று.

இச்சிறுகதை குழந்தைகளுக்குள் நடக்கும் ஒரு விளையாட்டைச் சொல்ல வந்த ஆசிரியர் இரக்கமுள்ள ஒரு கிராமத்து தாயையும் இவ்விடத்தில் படைத்துள்ளார். குழந்தைகள் வளரும் போதே மனிதநேயத்தோடு வளர்வதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஏழை மக்களிடம் வறுமை விலகாமல் இருந்தாலும் மனிதநேயம் விலகாமல் இருப்பதை உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை**

பாலினச் சமத்துவத்தை வலியுறுத்துவதையும் பெண்ணுக்கான உரிமைகளைப் போராடி பெறுவதையும் ஆணாதிக்கச் சிந்தனைக் கோட்பாடுகளை எதிர்ப்பதையும் அடிப்படையாகக் கொண்டது பெண்ணியம் என்னும் கோட்பாடாகும். தரம் கொண்ட கொள்கை பிடிப்புக்கு ஏற்ப பெண்ணியக் கோட்பாட்டை மிதவாத பெண்ணியம், தீவிரவாத பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம் என்று அடிப்படை பிரிவுகளாக வகைப்படுத்தலாம். மென்மையான குண நலன்களைக் கொண்ட பெண்ணை ஆணாதிக்கச் சிந்தனைக்குள் அடக்க முற்படாமல், பெண்ணைச் சக மனுசியாகப் பார்க்கும் பார்வையை முன்னெடுப்பது இந்திய பெண்ணியம் ஆகும். தமிழக அளவில் பெண்ணியச்

சிந்தனைகளை முன்னெடுத்தவர் தந்தை பெரியார் ஆவார். சங்க இலக்கியம் தொடங்கிப் பல்வேறு வடிவங்களில் தோற்றம் பெற்ற பெண்ணிய சிந்தனையானது நவீன இலக்கியங்களின் வரவினால் முழு வடிவம் பெற்றதைக் காண முடிகிறது.

கு.அழகிரிசாமியின் ராஜா வந்திருக்கிறார், அழகம்மாள் என்ற இரு சிறுகதைகளின் வழியே தாய்மைக்குப் புகழ் சேர்க்கும் விதமாக அரவணைப்பு, தியாகம், முதலிய பண்புகளைக் கொண்டவராகத் தாயம்மாள் விளங்குவதும், தன்னைவிட வயதில் மூத்தவரை மணந்து கொண்ட அழகம்மாள், பழமையிலிருந்து புதுமைக்கு மாற விரும்பிய போதும் மரபு என்ற அடிப்படையில் அதனைச் சமூகம் வெறுக்கவும், அதனை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் அழகம்மாள் என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் பெண்ணியம் சார்ந்த கருத்துகளை எடுத்துரைக்கிறார் கு.அழகிரிசாமி.

கு.அழகிரிசாமி தன்னுடைய படைப்பின் வழிச் சமுதாயத்தின் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துரைப்பதை தன் எழுத்துக்களின் நோக்கமாக எண்ணியுள்ளார் கலைக் கலைக்காகவே என்னும் குறிக்கோளில் சில எழுத்தாளர்கள் தம் படைப்புகளைச் செய்திருப்பினும், கலை வாழ்க்கைக்காக என்னும் குறிக்கோளில் பல அர்த்தமுள்ள படைப்புகளைச் செய்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வந்துள்ள படைப்பாளர்களில் ஒருவராக கு. அழகிரிசாமி திகழ்வது இக்கட்டுரையின் வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் கரிசல் மண்ணின் மணமும், எதார்த்த சிந்தனையும், எழுத்தில் தூய்மையும் கொண்டு தெளிந்த நடையில் தனது படைப்புகளைப் படைத்தளித்த கு.அழகிரிசாமியின் இலக்கியப் பங்களிப்பு இக்கட்டுரை வழித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## துணைநின்ற நூல்கள்

1. அழகிரிசாமி.கு, அன்பளிப்பு, பாரிநிலையம், முதற்பதிப்பு, சென்னை -2015.
2. அகிலன், கதைகலை, தாகம் வெளியீடு, மூன்றாம் பதிப்பு, சென்னை – 2002.
3. அறவாணன்.க.ப, தமிழ்ச் சமுதாய வரலாறு, தமிழ்க் கோட்டம் வெளியீடு, முதற்பதிப்பு – 1992.
4. கிருஷ்ணமூர்த்தி.ந, தமிழ்ச் சிறுகதை இலக்கிய உத்திகள், ஐந்திணைப் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை -1996.
5. ஞானமூர்த்தி.தா.ஏ, இலக்கியத் திறனாய்வியல், தமிழின்பம் வெளியீடு, முதற்பதிப்பு, கோவை -1980.